## திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர் முனைவர்.மு.கருணாகரன், இ.ஆ.ப.,

ந.க. அ1/14425/2016 நாள்:22.04.2016

பொருள்: கருணை அடிப்படை பணி நியமனம் - திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில் சங்கரன்கோவில் வட்டம், சத்திரம்பட்டி கிராமம் - கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து 07.10.2003ல் காலமான லேட்.மு.அருணாச்சலம் என்பவரது மகன் திரு.அ.தங்கமாரியப்பன் என்பவருக்கு கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் பணி நியமனம் செய்யப்பட்டது- தனியர் பணியேற்ற நாள் 12.12.2013 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் (2டி) 507, வருவாய்த் (பணி7(1) துறை நாள் 17.10.2012.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ1/49096/2012 நாள் 28.11.2013
3. அரசாணை(நிலை) எண் 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 02.03.2016.
4. முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண் ஆ.கு2/16363/20115 நாள் 04.04.2016

**ஆணை:-**

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில் சங்கரன்கோவில் வட்டம் , சத்திரப்பட்டி கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து வருகையில் 07.10.2003 அன்று காலமான மு.அருணாச்சலம் என்பவரின் மகன் திரு.அ.தங்கமாரியப்பன் என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட கால வரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், பார்வை 1ல் கண்ட அரசாணையின்படி கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராக பணிநியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட 6 கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தில் திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில் தற்காலிக கிராம நிருவாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டு , தனியர் 12.12.2013 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 3ல் கண்ட அரசாணையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கும்

தேவைப்படாத அனைத்து கிராம நிருவாக அலுவலர்களின் பணி நியமனத்தை நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

திரு.அ.தங்கமாரியப்பன் என்பவரின் நியமனத்திற்கு எவ்வித விதி தளர்வோ , அரசாணைகளுக்கு விலக்கோ தேவைப்படவில்லை என்பதால் தனியர் கிராம நிருவாக அலுவலராக பணியில் சேர்ந்த நாளான 12.12.2013 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தனியரின் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய உடன் நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு ஆணையிடப்படுகிறது.

22.4.16

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருநெல்வேலி.

22/4/16

பெறுநர்:
திரு.அ.தங்கமாரியப்பன்,
கிராம நிருவாக அலுவலர்,
பழங்கோட்டை கிராமம்,
திருவேங்கடம் வட்டம்.

நகல் :
முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை.
கோட்டாட்சியர், திருநெல்வேலி.
✓வருவாய் வட்டாட்சியர், திருவேங்கடம்.
அ1 இருப்பு கோப்பிற்கு.
உதிரி -1